*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 295/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW–1 (LW–1)***

*Name / Father's Name:* ***திருமதி.கிருஷ்ணவேனி க/பெ. செல்வராஜ்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **05.03.2026.**

துவக்க நேரம் 03.02 A.N

**1, 2, 3 எதிரிகள் ஆஜரில்லை. U/s.355 of BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஆணையம்பட்டியில் உள்ள மேலவீதியில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளை தெரியும், எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள். எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே வீட்டு கேஸ் நடந்துகொண்டிருந்தது. இந்நிலையில் கடந்த 16.06.2022 அன்று மாலை சுமார் 05.30 மணியளவில் செல்வம், கால்வாயில் பைப்லைன் போடுவதற்கு ஆட்களை அழைத்துவந்தார்.

2) நாங்கள் வீடு கட்டுவதற்காக செங்கற்களை அடுக்கிவைத்திருந்தோம். அந்த செங்கற்களை, செல்வம் கலைத்துவிட்டார். நாங்க, ஏற்கனவே சிவில் கேஸ் நடந்துக்கிட்டு இருக்கு, எதுக்கு வந்து கல்லை எல்லாம் இப்போ கலைக்கிறிங்க என்று நானும், மாமியார் பார்வதியும் கேட்டோம். அதற்கு செல்வத்தின் மகன் கதிர் கீழே கிடந்த கட்டையை எடுத்துவந்து எனது வலதுபுற புருவத்தின் மீது அடித்துவிட்டார்.

3) மேலும் செல்வம், கதிரிடம் இருந்த அதே கட்டையை வாங்கி எனது வலதுபுற காதின் மீது அடித்ததில் எனது காதில் இருந்த தோடு அறுந்துகீழே

விழுந்துவிட்டது. சித்ரா, என்னை கன்னம் கன்னமாக அடித்து தேவடியா, நாதேரி என்று கெட்ட வார்த்தை திட்டி, என்னை செருப்பால் அடிப்பதாக சொன்னார். மேலும் கிருஷ்ணன் கீழே கிடந்த குச்சியை எடுத்துவந்து, எனது வலதுபக்க முழங்கை முட்டியில் அடித்துவிட்டார்.

4) அதனை கேட்க வந்த எனது மாமியார் பார்வதியை, எதிரிகள் நான்குபேரும் எனது மாமியாரின் தலை மற்றும் முதுகில் அடித்துவிட்டார்கள். பிறகு இது தெரிந்து வந்த எனது கணவர் காயம்பட்ட எங்கள் இருவரையும் ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு அழைத்துவந்து சிகிச்சைக்கு சேர்த்தார்.

5) நடந்த சம்பவத்தை குறித்து ஆத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து, கெங்கவல்லி காவல் நிலைய போலிசார், என்னிடம் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் எனது கணவர் செல்வராஜ், சம்பவயிடத்தில் இல்லை என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்துகொண்டிருந்தபொழுது எனது கணவர் சம்பவயிடத்திற்கு வந்தாரா அல்லது சம்பவம் நடந்து முடிந்தபிறகு சம்பவயிடத்திற்கு வந்தாரா என்றால் சம்பவம் நடந்து முடிந்தபிறகு மாலை 06.30 மணிக்கு வந்தார்.

2) எனது கணவர் வந்தவுடன், நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு சென்றோமா என்றால் இல்லை, நேரடியாக ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். என்னையும், எனது மாமியாரையும் எனது கணவர்தான் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார் என்றும், வேறு யாரும் எங்களை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

3) 1ம் எதிரி செல்வம் என்பவர் கொடுத்த புகாரின் பேரில், எனது கணவர் மீதும், என் மீதும், என் மாமியார் மீதும் குற்ற எண்.176/2022, ச.பி 294(b), 323, 324, 506(2) இதச–ன் கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அந்த வழக்கில் நாங்கள் ஆஜராகுகின்றோமா என்றால் ஆமாம்.

4) எதிரி செல்வம், எனக்கும், எனது குடும்ப உறுப்பினர்களுக்கும் எதிராக அ.வ.எண்.20/2020 தாக்கல் செய்துள்ளாரா என்றால் ஆமாம், நாங்களும், அவர்கள் மீது சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். நாங்கள், எதிரிகள் மீது எந்தவித சிவில் வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றும், இவ்வழக்கிற்காக சிவில் வழக்கு தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

5) எங்கள் வீடு, எதிரியின் வீட்டிற்கு தென்புறம் உள்ளதா என்றால் ஆமாம். எங்கள் இரண்டு வீட்டிற்கும் இடையே எவ்வளவு இடம் காலியாக உள்ளது என்றால் 8 அடி இடம் உள்ளது, எதிரி, எங்களது இடத்தில் அவர்களது வீட்டை சேர்த்து கட்டியது இல்லாமல், மேலும் 2 அடி கொடுங்கள் என்று கேட்கிறார்கள். நான் சொல்லியதுபோல் எதிரி, எங்கள் இடத்தில் சேர்த்து கட்டவில்லை என்றும், வழக்கிற்காக எங்கள் இடத்தை சேர்த்து எதிரி அவர்கள் வீட்டை கட்டியதாக இவ்வாறு பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

6) நாங்கள் வீடு கட்டியபிறகுதான் எதிரி, அவரது இடத்தில் மூன்று ஆண்டுகள் கழித்து வீடு கட்டினார்கள் என்று சொன்னால் சரிதான். எதிரி மேஸ்திரி தொழில் செய்கிறார் என்றால் சரிதான், அதற்குண்டான கூலியை நாங்கள் அவருக்கு கொடுத்துவிட்டோம்.

7) எதிரி அவரது வீட்டை கட்டிமுடித்து பால் காய்ச்சிவிட்டு, அவரது வீட்டில் இரண்டாவது மாடியை கட்டும்பொழுதுதான் எங்கள் இடத்தை அவர் சேர்த்து கட்டியதாக நாங்கள் சொல்கிறோம் என்று சொன்னால் சரியல்ல, அவர் முதல்மாடி கட்டும்பொழுது நாங்கள் எங்கள் இடத்தை சேர்த்து கட்டாதீர்கள்

சொன்னோம். இவ்வாறு பிரச்சனை ஏற்பட்ட பிறகுதான் எதிரி, எங்கள் மீது சிவில் வழக்கு போட்டாரா என்றால் ஆமாம். எதிரி, எங்களுக்கெதிராக சிவில் வழக்கு தாக்கல் செய்தபிறகு எதிரியின் வீட்டை ஒட்டி, எனது கணவர் JCB வைத்து குழிதோண்டி அதில் தண்ணீர்விட்டு எதிரியின் வீட்டிற்கு சேதம் ஏற்படும் அளவிற்கு நடந்துகொண்டார் என்று சொன்னால் இல்லை, நாங்கள் பைப்லைன் போடுவதற்காக குழிதோண்டினோம். மேற்கண்டவாறு குழிதோண்டியது சம்மந்தமாக எதிரி, எங்கள் மீது புகார் கொடுத்து, அந்த புகாரின் பேரில் காவல் அலுவலர்கள் வந்து விசாரணை செய்தார்கள் என்று சொன்னால் சரிதான்.

8) போலிசார் விசாரித்ததற்கு எனது கணவர், அந்த குழியை மூடமுடியாது என்று போலிசாரிடம் சொன்னாரா என்றால் இல்லை, நாங்கள் அந்த குழியை மூடிவிட்டோம். போலிசார் சொன்னதன் பின்னிட்டுதான் அந்த குழியை மூடினோமா என்றால் ஆமாம்.

9) எதிரி, அவரது வீட்டின் முகப்பு பகுதியை பூசும்பொழுது எனது கணவர் பூசக்கூடாது என்று தடுத்தார் என்று சொன்னாலும், மேற்படி எதிரியின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறி எனது கணவர் அவராகவே மண்ணென்னெய் ஊற்றி தற்கொலைக்கு முயற்சி செய்தார் என்று கெங்கவல்லி காவல் நிலையத்தில் எனது கணவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். சிவில் வழக்கு சம்மந்தமாக நிலத்தை அளவீடு செய்யவேண்டி, ஆணையர்கள் வந்து அளந்தார்களா என்றால் ஆமாம்.

10) எதிரி, எங்கள் இடத்தில் சேர்த்து அவரது வீட்டை கட்டவில்லை என்றும், மேலும் எங்கள் இடத்தை அவர் அதிகமாகவும் கேட்கவில்லை என்றும், வழக்கிற்காக நான் இவ்வாறு பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார், என்னை ஒருமுறைதான் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் விசாரித்தனர் என்றும், அதற்கு பின்னிட்டு என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

11) போலிசாரிடம், நான் எத்தனை பேப்பரில் கையெழுத்து செய்தேன் என்றால் இரண்டு பேப்பரில் கையெழுத்து செய்தேன். ஒரு எழுதிய பேப்பரிலும், ஒரு எழுதாத பேப்பரிலும் கையெழுத்து செய்தேனா என்றால் ஆமாம். கதிர் என்பவர், என்னை அடிக்காமலும், சம்பவயிடத்தில் இல்லாத நிலையிலும், அவர் என்னை அடித்துவிட்டதாக வழக்கிற்காக மிகைப்படுத்தி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

12) கிருஷ்ணன் என்பவருக்கு 80 வயது இருக்குமா என்றால் இருக்கும். அவர் நடை, உடை இல்லாத நிலையில் இருந்தாரா என்றால் ஆமாம். கிருஷ்ணன், என்னையும், எனது மாமியாரையும் அடிக்காத நிலையில் அடித்துவிட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

13) கடந்த 16.06.2022ம் தேதி மாலை 06.15 மணியளவில் நான், எனது கணவர், எனது மாமியார் மற்றும் எனது உறவினர் ஒருவர் ஆகியோர்கள் ஒன்றாக சேர்ந்து, எதிரியையும், அவரது மனைவியையும் தாக்கினோம் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்டவாறு நாங்கள் தாக்கியதில், 1ம் எதிரிக்கு தலையில் 18 தையல் போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள், எங்களை தாக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

14) மேற்கண்ட சம்பவம் தொடர்பாக எதிரி கொடுத்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கில் என்னையும், எனது மாமியாரையும் அடித்துவிட்டதாக பொய்யாக புகார் கொடுத்து, அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 03.36 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.05 16:25:21 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 295/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-2)***

*Name / Father's Name:* ***திருமதி.பார்வதி க/பெ. ரங்கசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **05.03.2026.**

துவக்க நேரம் 03.37 A.N

**1, 2, 3 எதிரிகள் ஆஜரில்லை. U/s.355 of BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஆணையம்பட்டியில் உள்ள மேலவீதியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி கிருஷ்ணவேனி, எனது மருமகள். எதிரிகளை தெரியும், எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள், அவர்கள்தான் எங்களை அடித்தார்கள்.

2) தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மதியம் நான் ஆடுகளை மேய்த்துவிட்டு வீட்டிற்கு மதியம் 03.00 மணிக்கு ஓட்டிவந்து அடைப்பதற்காக ஆடுகளை பிடித்துவந்தேன். அப்பொழுது செல்வம், வீட்டின் சுவரை மேலே ஏற்றி கட்டிக்கொண்டிருந்தார். அப்பொழுது என் மருமகள் ஏம்பா கேஸ் இருக்குதே வீடு கட்டுற என்று கேட்டார். அதற்கு எதிரிகள் மூவரும், எனது மருமகளை அடித்துக்கொண்டே ரோடு வரைக்கும் வந்தார்கள்.

3) செல்வம், எனது மருமகளின் காதின் மீது அடித்து தோடு ஒன்று காணாமல் போய்விட்டது, காது காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது. அதனை நான் போய் கேட்டதற்கு கிருஷ்ணன் கையில் குச்சி ஊன்றிக்கொண்டு வந்தவர்,

அதே தடியால் எனது தலையின் பின் மண்டையில் அடித்தார். மேலும் கிருஷ்ணன் சுவரின் மீது ஏறி அடுக்கி வைத்திருந்த செங்கல்லை தூக்கி கீழே போட்டார். அந்த நேரத்தில் எனது மகன் வீட்டில் இல்லை. அடிபட்ட நாங்கள் ஆத்தூர், அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தோம். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) ஆம்புலன்ஸ் வந்துதான், அடிபட்ட எங்கள் இருவரையும் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்களா என்றால் ஆமாம். ஆண்கள் யாரும், எங்களுடன் மருத்துவமனைக்கு வரவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார், என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, விசாரித்தார்கள்.

2) எனது மகன் செல்வராஜ் இந்த வழக்கு சம்மந்தமாக நேரடியாக காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தாரா என்றால் நாங்கள் அனைவரும்தான் சென்று புகார் கொடுத்தோம். எனது மகன் செல்வராஜ், எதிரி செல்வத்தை அடித்ததாக சொல்லி எங்களுக்கெதிராக கொடுத்த புகாரில், எங்கள் மீது வழக்கு போட்டு, நாங்கள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகிறோமா என்றால் ஆமாம்.

3) எதிரி செல்வத்திற்கு எப்படி மண்டை உடைந்தது என்றால் ஒருவருக்கொருவர் சண்டை போட்டு அடித்துக்கொண்டார்கள், அதில் செல்வத்திற்கு மண்டை உடைந்துவிட்டது. நாங்கள் அனைவரும் சேர்ந்து, எதிரி செல்வத்தை அடித்துவிட்டு, எனது மருமகள் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

4) மேற்கண்ட சம்பவம் தொடர்பாக எதிரி கொடுத்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக இந்த வழக்கில் என்னையும், எனது மருமகளையும் அடித்துவிட்டதாக பொய்யாக புகார் கொடுத்து, அதற்கு ஆதரவாக பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 03.50 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.03.05 16:25:31 +0530

Judicial Magistrate No.2, Attur.